# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

### கொள்கை விளக்கக் குறிப்பு
### 2021 – 2022

### மானியக் கோரிக்கை எண். 13


## அர. சக்கரபாணி

உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 1-39 |
| 2. | நுகர்வோர் பாதுகாப்பு | 40-55 |
| 3. | விலைக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 56-58 |
| 4. | அமலாக்கம் | 59-63 |
| 5. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 64-94 |
| 6. | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் | 95-101 |
| | முடிவுரை | 102 |

# இயல் - 1

# உணவுப்பொருள்

# வழங்கல் மற்றும் நுகர்வோர்

# பாதுகாப்புத் துறை

**முகவுரை**

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு**

**- திருவள்ளுவர்**

தமிழ்நாடு அரசு குடிமக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. பொது மக்களின் வீடுகளுக்கருகிலேயே பொது விநியோகத் திட்ட அங்காடிகளை அமைத்து அவர்களுக்கு இன்றியமையாப் பொருட்களை நியாயமான விலையில் வழங்கிடும் வகையில் பொது விநியோகத் திட்டம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பொதுவிநியோகத் திட்டக் கொள்கைகளை அமல்படுத்துவதில், ஆணையாளரின் தலைமையில் அமைந்துள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இத்துறையானது இன்றியமையாப் பொருட்கள் சட்டம், 1955 மற்றும் அச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் கட்டுப்பாட்டு ஆணைகளையும் அமல்படுத்துகிறது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019, நுகர்வோர் உரிமைகள் மற்றும் சட்ட வழிமுறைகள் குறித்து பொதுமக்கள் மற்றும் மாணவ சமுதாயத்தினரிடையே விழிப்புணர்வை உருவாக்குவதில் இத்துறை முக்கியப் பங்காற்றுகிறது.

குறிப்பிட்டவர்களுக்கு மட்டுமே பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும் என்று ஒன்றிய அரசு வலியுறுத்தினாலும், பொது விநியோகத் திட்டத்தின்

பயன்களைப் பெறுவதில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பல பயனாளிகள் விடுபடக்கூடும் என்பதாலும், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களும் விடுபட நேரிடும் என்பதாலும், தமிழக அரசு குறிப்பிட்டவர்களுக்கான திட்டம் என்று இல்லாமல் மாநிலத்தின் குடிமக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வண்ணம் அனைவருக்குமான பொதுவிநியோக திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

நேர்மையற்ற வர்த்தக முறையிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பது இத்துறையின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாகும். நுகர்வோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் சட்டம் மற்றும் நிறுவனக் கட்டமைப்பைப் பயன்படுத்தி, பயனுள்ள துரிதமான நிவாரணத்தினை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் வாயிலாக பெற வழிவகை செய்வதும்

மாநிலத்தின் நுகர்வோர் நலக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

## 1. பொது விநியோகத் திட்டம்

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வருமானம் மற்றும் சமூகப் பாகுபாடின்றி உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்திட கடந்த 40 ஆண்டுகளாக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. 01.11.2016 முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013 அமல்படுத்தப்பட்ட நிலையிலும், அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் என்ற நிலையினைத் தொடர்ந்து கடைபிடித்து வருகிறது.

முழுக்கணினிமயமாக்கல் திட்டத்தின் கீழ் மாநிலப் பொது விநியோகத்திட்டம் முழுதும் கணினிமயமாக்கப்பட்டு நியாயவிலைக் கடைகளின் அனைத்துப் பரிவர்த்தனைகளும் தானியங்கி முறையில் செயல்படுத்தப்படுகிறது. உணவுத்

தானியங்களின் பல்வேறு நிலைகளிலான நகர்வு மற்றும் இருப்பு நிகழ்நேரத்தில் கண்காணிக்கப்படுகிறது. துறையால் வழங்கப்படும் சேவைகள் பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையிலும், வெளிப்படைத் தன்மையுடனும் இருக்க இது வழிவகை செய்துள்ளது. வெளிப்படைத் தன்மையுடன் மின்னணு குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி விற்பனை முனைய இயந்திரங்கள் வாயிலாக மட்டுமே குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

ஒரே நாடு ஒரே ரேசன் கார்டு திட்டமானது அக்டோபர் 2020 முதல் தமிழகத்தில் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டமானது முன்னுரிமைக் குடும்ப அட்டைதாரர்கள் ஆதார் விரல் ரேகைப் பதிவின் அடிப்படையில் பிற மாநிலங்களிலும் இன்றியமையாப் பொருட்களைப் பெற வழிவகை செய்கிறது.

மாநிலத்திற்குள்ளான உள்பெயர்வு வசதி வாயிலாக, குடும்ப அட்டைதாரர்கள் முகவரி மாற்றம் மேற்கொள்ளாமலேயே தமிழகத்திலுள்ள எந்தவொரு நியாய விலைக் கடையிலும் தங்களுக்குரிய இன்றியமையாப் பொருட்களை விலையின்றி அல்லது மானிய விலையில் பெற்றுக் கொள்ளலாம். இதர மாநிலத்தைச் சேர்ந்த முன்னுரிமைக் குடும்ப அட்டைதாரர்கள் அரிசி மற்றும் கோதுமையினை முறையே ரூ.3/- மற்றும் ரூ.2/- என்ற விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**1.1 நியாய விலைக் கடைகள்**

பொது விநியோகத் திட்ட அமைப்பின் அடித்தளமாகச் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளில் இன்றியமையாப் பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு

வருகின்றன. கூட்டுறவுத் துறையினைச் சார்ந்த கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலான நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன; பிற நியாய விலைக் கடைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நடத்தி வருகின்றன. தனியார் நிறுவனமோ தனிநபரோ தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகள் நடத்திட அனுமதியில்லை.

நியாய விலைக் கடைகளில் மின்னணு குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி விற்பனை முனைய இயந்திரங்கள் மூலமாக மட்டுமே குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதால், நியாய விலைக் கடைகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து பரிவர்த்தனைகளும் நிகழ்நேரத்தில் கண்காணிக்கப்படுகிறது.

31.07.2021 நிலவரப்படி, மாநிலத்தில் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடைகளின் நிறுவனவாரியான எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :

| வ. எண். | நிறுவனம் | முழு நேரம் | பகுதி நேரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கூட்டுறவுச் சங்கங்கள் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குபவை) | 23,216 | 9,889 | 33,105 |
| 2 | இதர கூட்டுறவுச் சங்கங்கள் | 114 | 133 | 247 |
| 3 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,224 | 233 | 1,457 |
| 4 | மகளிர் சுய உதவிக் குழுக்கள் | 466 | 21 | 487 |
| | **மொத்தம்** | **25,020** | **10,276** | **35,296** |

குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்து 1.5 கிலோ மீட்டருக்கு மேல் சென்று இன்றியமையாப் பொருட்களை வாங்கும் நிலையினைத் தவிர்க்கும் வகையில்,

அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே இன்றியமையாப் பொருட்களை வாங்கிச் செல்லும் வகையில் நியாய விலைக் கடைகளைத் திறக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்கிறது. மக்கள் எளிதில் சென்று வர முடியாத பகுதிகள் மற்றும் மலைப் பகுதிகளில் நியாய விலைக் கடைகளை திறக்க சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. தேவைப்படும் நேர்வுகளில், நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளைத் தளர்த்தி புதிய நியாய விலைக் கடைகள் திறக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் தொலைவிலுள்ள மலைப்பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களின் சேவைக்காக 1997 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நடமாடும் நியாயவிலைக் கடைகளும் செயல்பாட்டில் உள்ளன.

### 1.2 மின்னணு குடும்ப அட்டைகள்

நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. 07.05.2021 முதல் 31.07.2021 வரை 3,38,512 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 01.04.2017 முதல் அனைத்து மின்னணு குடும்ப அட்டைகளும் ஆதார் எண் பதிவு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

#### 1.2.1 *மின்னணு குடும்ப அட்டைகளின் வகைகள்*

குடும்ப அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களின் விருப்பம் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐந்து வகையான மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. மின்னணு குடும்ப அட்டை

வகை, அதற்கான உரிம அளவு மற்றும் 31.07.2021 நிலவரப்படி, பயன்பாட்டில் உள்ள மின்னணு குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை விவரங்கள்:

| வ. எண். | குடும்ப அட்டையின் வகை | தகுதியான இன்றியமையாப் பொருட்கள் விபரம் | மின்னணு குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | முன்னுரிமை குடும்ப அட்டைகள் (PHH)* | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 93,23,734 |
| 2 | முன்னுரிமை குடும்ப அட்டைகள் – அந்தியோதயா அன்னயோசனா (PHH - AAY) | 35 கிலோ அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 18,63,077 |
| 3 | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (NPHH)** | அரிசி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களும் | 97,53,532 |
| 4 | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள்-சர்க்கரை (NPHH-S) | சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகள் (அரிசி தவிர பிற இன்றியமையாப் பொருட்கள்) | 3,84,476 |

| | | | |
|---|---|---|---|
| 5 | முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் – எப்பொருளும் இல்லாதவை (NPHH - NC) | எப்பொருளும் இல்லாதவை | 55,293 |
| **மொத்த மின்னணு குடும்ப அட்டைகள்** | | | **2,13,80,112** |

*** ஒன்றிய அரசின் ஒதுக்கீடு**

**** மாநில அரசின் ஒதுக்கீடு**

### 1.2.2. வறியோரை உயர்த்தும் உணவு திட்ட குடும்ப அட்டைகள் (AAY)

வறியோரை உயர்த்தும் உணவுத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் வசித்து வரும் வறியவர்களிலும் வறிய குடும்பங்களின் உறுப்பினர்கள் பயனாளிகளாக கண்டறியப்பட்டுள்ளனர். அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்கள் மாதம் ஒன்றுக்கு 35 கிலோ விலையில்லா அரிசி பெறத் தகுதியுடையவராவர். இதைத் தவிர, அந்தியோதயா அன்னயோஜனா பயனாளிகளுக்கு பொது

விநியோகத் திட்டத்தின் கீழ் பிற இன்றியமையாப் பொருட்களும் வழங்கப்படுகின்றன. இம்மாநிலத்திற்கு ஒன்றிய அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அந்தியோதயா அன்னயோஜனா பயனாளிகளின் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 18,64,600 ஆகும்.

### 1.2.3 திருநங்கைகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்குதல்

தமிழக அரசு, மாநிலத்தில் தனி நபர் அல்லது குடும்பமாக வசித்து வரும் திருநங்கைகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்கி வருகிறது. 31.07.2021 வரை 2,950 திருநங்கைகளுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.2.4 காவல் / சிறை மற்றும் வனத்துறைப் பணியாளர்களுக்கான குடும்ப அட்டைகள்

தமிழ்நாடு அரசு காவல், சிறை மற்றும் வனத்துறைப் பணியாளர்களுக்கு இன்றியமையாப் பொருட்களைப் பொது

விநியோகத் திட்ட விலையிலும், துவரம் பருப்பு கிலோ ரூ.15.00-க்கும், சர்க்கரை கிலோ ரூ.12.50-க்கும் மற்றும் பாமாயில் லிட்டர் ரூ.12.50-க்கும், இதர இன்றியமையாப் பொருட்கள் வழக்கமான விலையிலும் நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கி வருகிறது.

மேற்படி மானியத்திற்கு தகுதியுடைய சீருடைப் பணியாளர்களின் துறை / பதவி வாரியான விவரம்:

| வ. எண். | துறையின் பெயர் | மானியத்திற்கு தகுதியுடைய அலுவலர்களின் பதவி நிலை |
|---|---|---|
| 1 | காவல் துறை | இரண்டாம் நிலை காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை |
| 2 | வனத் துறை | வனக் காவலர் முதல் வனச் சரகர் வரை |

| | | |
|---|---|---|
| 3 | சிறைத் துறை | இரண்டாம் நிலை காவலர் முதல் துணை சிறை அலுவலர் வரை |

இச்சீருடைப் பணியாளர்களுக்கு முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் (Non Priority Household - NPHH) வழங்கப்பட்டு நியாய விலைக் கடைகளில் உள்ள விற்பனை முனைய இயந்திரங்களில் தனி அடையாளத்திற்காக 'காவலர் அட்டை' எனக் குறிக்கப்பட்டுள்ளது. 31.07.2021 நிலவரப்படி, இவ்வகையில் 59,271 பயனாளிகள் உள்ளனர்.

### 1.2.5. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அன்னபூர்ணா திட்ட பயனாளிகள் மற்றும் முதியோர் உதவித்தொகை பெறுவோருக்கு அரிசி வழங்குதல்

தமிழகத்தில் வசித்து வரும் 8,491 அன்னபூர்ணா திட்டப் பயனாளிகள் மற்றும் 4,01,445 முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கு அரசினால் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதமொன்றிற்கு முறையே 10 கிலோ மற்றும் 5 கிலோ

விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி பயனாளிகளுக்கு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1.2.6 தகுதியற்றக் குடும்ப அட்டைகளை கண்டறிதல்

முழு கணினிமயமாக்கல் திட்டத்தின் கீழ் ஆதார் எண் பதியப்பட்ட தரவு தொகுப்பு வாயிலாக தகுதியற்றக் குடும்ப அட்டைகள் கண்டறியப்பட்டதுடன், அதிக மானியத்திற்குட்பட்ட விலையில் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்கள் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டுமே விநியோகம் செய்யப்படுவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## 1.3 பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இன்றியமையாப் பொருட்களின் வழங்கல் அளவு

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருட்கள்

வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் வழங்கப்பட்டு வருகின்றன. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொருட்களின் வழங்கல் அளவு மற்றும் அவற்றின் விற்பனை விலை விபரம் பின்வருமாறு :

| **வ. எண்** | **பொருட்கள்** | **விற்பனை விலை (கிலோ / லிட்டர் ஒன்றுக்கு)** | **விநியோக அளவு** |
|---|---|---|---|
| 1 | அரிசி | விலையில்லை | தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013, 01.11.2016 முதல் நடைமுறை படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அனைவருக்குமான பொது விநியோகத்திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி அரிசி குடும்ப அட்டைதாரர்களில் நபர் ஒருவருக்கு (சிறுவர் உட்பட) மாதம் ஒன்றுக்கு 5 கிலோ அரிசி பெறுவதற்குத் தகுதியுண்டு. இந்நேர்வில் புதிய திட்டத்தின் காரணமாக அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அட்டைதாரர் பெற்று வந்த உணவு தானிய அளவு குறைவில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு குடும்ப அட்டையில் ஒரே நபர் மட்டுமே இருப்பாராயின் அக்குடும்ப |

| | | | |
|---|---|---|---|
| | | | அட்டைக்குத் தகுதியான 12 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது.<br>1 யூனிட் 12 கிலோ<br>1.5 யூனிட் 14 கிலோ<br>2 யூனிட் 16 கிலோ<br>2.5 யூனிட் 18 கிலோ<br>3 மற்றும் 4 யூனிட் 20 கிலோ<br>5 யூனிட் மற்றும் அதற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு நபருக்கும் தலா 5 கிலோ வீதம் அதிகப்படுத்தி வழங்கப்படுகிறது. அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு 35 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்படுகிறது. |
| 2. | கோதுமை | விலையில்லை | சென்னை நகரம் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் ஒரு குடும்ப அட்டைதாரருக்கு<br>10 கிலோ வீதமும் ஏனைய பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு<br>5 கிலோ வீதமும் அரிசிக்குப் பதிலாக கோதுமை விலையின்றி வழங்கப்படுகிறது. |
| 3. | சர்க்கரை | அந்தியோதயா அன்ன யோஜனா பயனாளிகளுக்கு கிலோ ரூ.13.50<br>மற்ற பயனாளிகளுக்கு கிலோ ரூ.25.00 | அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு நபர் ஒன்றுக்கு 500 கிராம் வீதம் அதிகபட்சமாக<br>2 கிலோவும், சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு அரிசிக்கு பதிலாக கூடுதலாக 3 கிலோ சர்க்கரையும் அதிகபட்சமாக 5 கிலோவும் வழங்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 4. | மண்ணெண்ணெய் | லிட்டர் ஒன்றுக்கு ரூ.15.00 முதல் ரூ.16.50 வரை | குடும்ப அட்டைதாரர்களின் இருப்பிடம் மற்றும் பெற்றுள்ள எரிவாயு இணைப்பு ஆகியவற்றின் அடிப்படையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3 லிட்டர் முதல் 15 லிட்டர் வரை வழங்கப்படுகிறது. |
| 5. | துவரம் பருப்பு | கிலோ ஒன்றுக்கு ரூ.30/- | ஒரு குடும்ப அட்டைக்கு துவரம் பருப்பு தலா ஒரு கிலோ வீதம் வழங்கப்படுகிறது. |
| 6. | பாமாயில் | லிட்டர் ஒன்றுக்கு ரூ.25/- | ஒரு குடும்ப அட்டைக்கு பாமாயில் தலா ஒரு லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது. |

### 1.3.1. அரிசி

பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்து, இந்திய உணவுக் கழகம் மூலமாக பெறப்படுகிறது. ஒன்றிய அரசின் தற்போதைய மாதாந்திர அரிசி ஒதுக்கீடு மற்றும் விலை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | வகை | மாத ஒதுக்கீடு (மெ. டன்னில்) | வழங்கல் விலை (கிலோ ஒன்றிற்கு) |
|---|---|---|---|
| 1 | அந்தியோதயா அன்னயோஜனா (AAY) | 58,734.900 | ரூ. 3.00 |
| 2 | முன்னுரிமை குடும்பங்கள் (Priority Households) | 1,33,243.083 | ரூ. 3.00 |
| 3 | ஈடுசெய் ஒதுக்கீடு (Tide Over) | 83,853.417 | ரூ. 8.30 |
| | மொத்தம் | **2,75,831.4** | |

மேலும், 1,62,142.13 மெ.டன் அரிசி முன்னுரிமையற்ற குடும்ப அட்டை பயனாளிகளுக்காக மாநில அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கடந்த மூன்று மாத சராசரி மாதாந்திர அரிசி நுகர்வு 3.23 இலட்சம் மெ. டன்.

### 1.3.2 சர்க்கரை

தமிழகத்தின் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் சர்க்கரையின் மாதாந்திரத் தேவை அளவு 33,086 மெ.டன் ஆகும். 01.06.2017 முதல் ஒன்றிய

அரசு மானிய விலையில் அளித்து வந்த சர்க்கரையின் அளவைக் குறைத்து, 18.64 இலட்சம் அந்தியோதயா அன்னயோஜனா (AAY) குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும்1,864 மெ.டன் சர்க்கரை வழங்கி வருகிறது. லெவி சர்க்கரை ஒதுக்கீடு நீக்கத்தினைத் தொடர்ந்து மானிய விலையில் ஒன்றிய அரசால் மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்த 10,820 மெ.டன் அளவு குறைக்கப்பட்டு 01.06.2017 முதல் 1,864 மெ.டன் வழங்கப்பட்டு வருவதால், மாநிலத்தின் முழுத் தேவையினையும், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் வெளிச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்து, பின்வரும் விலையில் விநியோகிக்கப்படுகிறது.

(அ) அந்தியோதயா அன்னயோஜனா (AAY) கீழ் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள குடும்ப அட்டைகளுக்குத் தற்போது உள்ள வழங்கல் அளவிலேயே கிலோ ரூ.13.50 என்றும்,

(ஆ) அந்தியோதயா அன்னயோஜனா (AAY) குடும்ப அட்டைகள் தவிர இதர சர்க்கரை பெறத் தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்களுக்கு அதே வழங்கல் அளவில் கிலோ ரூ.25/- ஆக வழங்கி வருகிறது.

இதன் காரணமாக ஏற்படக்கூடிய விலை வித்தியாசத் தொகையினை தமிழ்நாடு அரசு ஏற்று வருகிறது.

### 1.3.3. கோதுமை

ஒன்றிய அரசு நம்மாநிலத்திற்கு மாதந்தோறும் 30,647.90 மெ.டன் கோதுமை ஒதுக்கீடு செய்து வருகிறது. அரிசிக்குப் பதிலாக கோதுமையை விரும்பும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மற்றும் மாவட்டத் தலைமையிடங்களில் குடும்ப அட்டைதாரரின் விருப்பத்தின் அடிப்படையில் 10 கிலோ வீதமும், இதர பகுதிகளில் 5 கிலோ

வீதமும் நியாய விலைக் கடைகளில் இருப்பின் அளவினைப் பொறுத்து அரிசிக்குப் பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

### 1.3.4 மண்ணெண்ணெய்

ஒன்றிய அரசின் கொள்கையின்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விளக்கெரிக்கவும், சமையல் செய்வதற்கும் மட்டுமே மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. 31.07.2021 அன்றைய நிலவரப்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கான மாதாந்திர மண்ணெண்ணெய் தேவை 38,468 கி.லி. ஆகும். நம் மாநிலத்திற்கு ஏப்ரல் 2006-இல் 59,852 கி.லி. ஆக வழங்கப்பட்ட ஒதுக்கீடு. 2021 ஏப்ரல் மாதத்தில் 7,536 கி.லி ஆக படிப்படியாக குறைக்கப்பட்டது. இது மாநிலத்தின் மொத்த தேவையான 38,468 கி.லிட்டரில் 20 விழுக்காடாகும். தமிழகத்திலுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும்

ஒரே அளவில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்ற நோக்கில், மாநிலத்தின் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை உயர்த்தி வழங்க ஒன்றிய அரசினை மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

### 1.4 சிறப்புப் பொது விநியோகத் திட்டம்

வெளிச்சந்தையில் விற்கப்படும் பருப்பு மற்றும் சமையல் எண்ணெயின் விலையினைக் கட்டுப்பாட்டில் வைக்கவும், மக்கள் அனைவரும் ஊட்டச்சத்து மிகுந்த உணவினைப் பெறுவதற்கும், 2007-ஆம் ஆண்டு அன்றைய மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சிறப்பு பொது விநியோகத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு லிட்டர் சமையல் எண்ணெய் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதமும் 20,000 மெ.டன் துவரம் பருப்பு,

2.00,00,000 லிட்டர் பாமோலின் ஆயில் (பாமாயில்) அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2021 டிசம்பர் மாதம் வரை நீட்டித்து அரசு ஆணையிட்டுள்ளது.

## 1.5 ரமலான் மாதத்தில் இஸ்லாமியர்களுக்கு அரிசி வழங்குதல்

ரமலான் மாதத்தின் போது நோன்பு கடைபிடிக்கும் இஸ்லாமியர்கள் பயன்பெறும் வகையில் நோன்புக் கஞ்சி தயாரிப்பதற்கு பள்ளிவாசல்களுக்கு ஆண்டுதோறும் சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் பச்சரிசி கிலோ ரூ.1/- என்ற விலையில் அரசு வழங்கி வருகிறது.

## 1.6 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013

தமிழ்நாட்டில், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013, 01.11.2016 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தின்படி நபர் ஒருவருக்கு மாதந்தோறும் 5 கிலோ அரிசி என்ற அளவில் முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். எனினும், இச்சட்டத்தினை அமல்படுத்தும்போது. அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் ஏற்கனவே பெற்று வந்த அல்லது நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு 5 கிலோ அரிசி; இவற்றில் எது அதிகமோ அந்த அளவு அரிசியினை விலையின்றிப் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, தமிழக அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின் சாராம்சத்தை தொடர்ந்து கடைபிடித்து வருகிறது.

இந்நிலையில், முன்னுரிமையுள்ள மற்றும் முன்னுரிமையற்ற குடும்ப அட்டைதாரர்- களுக்கான மாதாந்திர வழங்கல் அளவில் வேறுபாடு இல்லாவிட்டாலும், முன்னுரிமைப் பயனாளிகளைக் கண்டறிவது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி அவசியமானதாகும். அதன்படி,

ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ளவாறு நகர மற்றும் கிராமப் பகுதிகளில் வசிக்கும் முன்னுரிமைப் பயனாளிகளைக் கண்டறியும் பணி மேற்கொள்ளப்பட்டு, முன்னுரிமைப் பயனாளிகள் மற்றும் முன்னுரிமையற்ற பயனாளிகளின் இறுதிப்பட்டியல் www.tnpds.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மாநிலம் முழுவதுமுள்ள விளிம்பு நிலையிலுள்ள மற்றும் பொருளாதாரத்தில் நலிவுற்ற நிலையில் உள்ள இருளர்கள், நரிகுறவர்கள், திருநங்கைகள் உள்ளிட்ட 58 வகையான பிரிவினரை முன்னுரிமைக் குடும்பங்களாக அடையாளம் காணும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது,

முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மூலம் இன்றியமையாப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் முதியோர்களும் மாற்றுத்

திறனாளிகளும் சிரமமின்றி தங்களுக்குரிய பொருட்களைப் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**1.7 கண்காணிப்புக்குழுக்கள்**

தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள் 2017 இன் கீழ், பொது விநியோகத் திட்டத்தின் பயன்கள் உரியவர்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்திட, மாநிலம், மாவட்டம், வட்டம் / மண்டலம் மற்றும் நியாய விலைக் கடை வாரியாக கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநில / மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் ஒவ்வொரு காலாண்டிற்கும் குறைந்தபட்சம் ஒரு முறையேனும் கூட்டப்பட வேண்டும்; வட்டம் / மண்டலம் மற்றும் நியாயவிலைக் கடை அளவிலான குழுக்கள் மாதத்திற்கு குறைந்தபட்சம் ஒரு முறையேனும் கூட்டப்படவேண்டும்.

### 1.7.1 குறைதீர் அமைப்பு

பொதுமக்களின் குறைகளைத் தீர்வு செய்யும் பொருட்டு, மாவட்ட வருவாய் அலுவலர்கள் மாவட்ட குறைதீர் அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், துணை ஆணையர் வடக்கு / தெற்கு ஆகியோர் மாவட்ட குறைதீர் அலுவலர்களாகச் செயல்பட்டு வருகிறார்கள். குறைதீர் அலுவலர்களின் தொடர்பு விவரங்கள் பொது விநியோகத்திட்ட வலைத்தளம் மற்றும் பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் வகையில் இணைய வழியாகவும், கட்டணமில்லாத் தொலைபேசி எண் 1967 மற்றும் 1800 425 5901 வழியாகவும் புகார் செய்யும் வசதியுடன் வலுவான குறைதீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 1.7.2. மாநில உணவு ஆணையம்

தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013, முறையாக செயல்படுத்தப்படுவதை கண்காணித்திட தமிழ்நாடு மாநில உணவு ஆணையம் அமைக்கப்பட்டு, தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையத்தின் கூட்டங்கள் சீரான இடைவெளிகளில் நடத்தப்படுகிறது.

### 1.7.3. விற்பனையாளர்களுக்குப் பயிற்சி

பொது விநியோகத் திட்ட அங்காடிகளில் மேம்பட்ட சேவை வழங்கும் பொருட்டு 35,296 நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 1.8 பொது விநியோகத் திட்டத்தினைக் கணினிமயமாக்கல்

"ஆரம்பம் முதல் கடைசி வரை கணினிமயமாக்கல்" திட்டத்தின் மூலம் மாநில பொது விநியோகத் திட்டம் முழு கணினிமயமாக்கல் செய்யப்பட்டது. இதன் ஒரு பகுதியாக ஆதார் எண்கள் இணைக்கப்பட்ட அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் மின்னணு குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

**இத்திட்டம் அளிக்கும் வசதிகள்**

- குடும்ப அட்டைகள் / பயனாளிகளின் தரவினை டிஜிட்டல் மயமாக்கல்;
- விநியோக சங்கிலிமேலாண்மையைக்கணினிமயமாக்குதல்;
- வெளிப்படைத் தன்மை கொண்ட இணையதளம்;
- திறன்மிகு குறைதீர் அமைப்புகள்;

- பொது விநியோகத் திட்டத்திற்கான இன்றியமையாப் பொருட்களின் ஒதுக்கீட்டினை இணையவழி மூலம் மேற்கொள்ளுதல்;
- கிடங்குகள் மற்றும் நியாய விலைக் கடைகளுக்கு இன்றியமையாப் பொருட்களின் நகர்வினை நிகழ்நேரத்தில் கண்காணித்தல்;
- பொது மக்கள் இணையம் வழியாக புதிய குடும்ப அட்டைகள் பெற விண்ணப்பம் செய்வதற்கும், குடும்ப அட்டைகளில் விவர மாற்றம் மேற்கொள்வதற்கும், மின்னணு குடும்ப அட்டை தொடர்பான விண்ணப்பங்களின் நிலை பற்றி அறிந்து கொள்வதற்கும், இன்னும் இது போன்றவற்றிற்கும் வழிவகை செய்தல்;
- குடும்ப அட்டைதாரர்கள் தங்களுடைய குடும்ப அட்டை இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடையில் உள்ள

இன்றியமையாப் பொருட்களின் இருப்பு விவரங்களைத் தெரிந்துகொள்ள வழிவகை செய்தல்;

- ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் அவர் பதிவு செய்துள்ள கைபேசிக்கு இன்றியமையாப் பொருட்கள் விநியோகிக்கப்பட்ட விவரம் குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பப்படுவதால் போலி ரசீது போடுவது தடுக்கப்படுகிறது.

## 1.9 பொது விநியோகத் திட்டத்தின் ஒருங்கிணைந்த மேலாண்மை

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின் ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டம் தமிழ்நாட்டில் அக்டோபர் 2020 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது பிற மாநிலங்களைச் சேர்ந்த முன்னுரிமை குடும்ப அட்டைதாரர்களுக்கு கைவிரல்

ரேகை வைத்தல் மூலம் ஆதார் பதிவுகளைச் சரிபார்த்தல் முறையில் தங்களுக்கான இன்றியமையாப் பொருட்களைப் பெற வழிவகை செய்கிறது. இத்திட்டம், வெளிமாநில குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்குரிய இன்றியமையாப் பொருட்களை உரிய விலை செலுத்தி பெற்றுக்கொள்ள வழிவகை செய்கிறது.

## 1.10 கொரோனா நிவாரண உதவிகள்

### 1.10.1 கொரோனா பெருந்தொற்று நிவாரணத் தொகை

கொரோனா பெருந்தொற்று காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் வகையில், அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் 2,09,81,900 பேர்களுக்கு ரூ.4,000/- இரண்டு தவணைகளில் ரூ.2,000 வீதம் மே மற்றும் ஜுன் 2021-இல் ரூ.8,392.76 கோடி விநியோகிக்கப்பட்டது. 99.2 விழுக்காடு அரிசி குடும்ப அட்டைதாரர்கள் இந்தப் பண நிவாரணத்தைப் பெற்றுள்ளனர்.

**1.10.2 14 மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்புப் பை**

கொரோனா பெருந்தொற்று நிவாரணத்தின் ஒரு பகுதியாக அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் கீழ்க்கண்ட 14 மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்புப் பை ரூ.977.10 கோடி செலவில் வழங்கப்பட்டது:

| வ. எண் | பொருட்கள் | அளவு |
|---|---|---|
| 1 | கோதுமை மாவு | 1 கிலோ |
| 2 | உப்பு | 1 கிலோ |
| 3 | ரவை | 1 கிலோ |
| 4 | சர்க்கரை | 500 கிராம் |
| 5 | உளுத்தம் பருப்பு | 250 கிராம் |

| | | |
|---|---|---|
| 6 | கடலைப்பருப்பு | 250 கிராம் |
| 7 | புளி | 250 கிராம் |
| 8 | டீ தூள் | 200 கிராம் |
| 9 | கடுகு | 100 கிராம் |
| 10 | சீரகம் | 100 கிராம் |
| 11 | மஞ்சள் தூள் | 100 கிராம் |
| 12 | மிளகாய் தூள் | 100 கிராம் |
| 13 | குளியல் சோப்பு | 125 கிராம் |
| 14 | சலவை சோப்பு | 250 கிராம் |

இது பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றதோடு 99 விழுக்காட்டுக்கும் மேலானவர்கள் இப்பொருட்களைப் பெற்றுக்கொண்டனர்.

### 1.10.3 திருநங்கைகள் மற்றும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு கொரோனா பெருந்தொற்று நிவாரண ரொக்கத் தொகை மற்றும் 14 மளிகைப் பொருட்கள் வழங்குதல்

திருநங்கைகள் மற்றும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு ரொக்கத் தொகை ரூ.4,000/- (இரு தவணைகளில் மே மற்றும் ஜுன் 2021) மற்றும் 14 வகை மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

### 1.10.4 "பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன்னயோஜனா" திட்டத்தின் கீழ் விலையில்லா அரிசி வழங்கல்

கொரோனா பெருந்தொற்று காரணமாக ஒன்றிய அரசானது பிரதான் மந்திரி கரீப் கல்யாண் அன்னயோஜனா திட்டத்தின் கீழ் முன்னுரிமை (PHH) குடும்ப அட்டைதாரர்களுக்கும், அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கும் நபர் ஒருவருக்கு 5 கிலோ

வீதம் விலையில்லா அரிசி மே மற்றும் ஜுன் 2021 மாதங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தமிழக அரசால் முன்னுரிமையற்ற (NPHH) 99,86,457 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.687.84 கோடி நிதி மே மற்றும் ஜூன் 2021 மாதங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒரு நபருக்கு தலா 5 கிலோ வீதம் கூடுதல் அரிசி விலையில்லாமல் வழங்கப்பட்டது.

## 1.11 உணவு மானியம்

மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்கும் இலக்குடன் தமிழக அரசு அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் (குறிப்பாக

அரிசி மற்றும் கோதுமை விலையில்லாமல் வழங்கப்படுகிறது) பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதல் மற்றும் விநியோகத்திற்காக தமிழக அரசு மானியமாக அதிக அளவில் ஒதுக்கீடு செய்கிறது. பொது விநியோகத் திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்த 2021-22 ஆம் நிதியாண்டிற்கு உணவு மானியமாக 8,437.57 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# இயல் - 2

## நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோருக்குத் தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் நியாயமான விலையில் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வது தமிழக அரசின் முதன்மையான நோக்கமாகும். மாறி வரும் தொழில் நுட்பங்கள், உலகமயமாக்கல் மற்றும் மின்னணு வணிகம் ஆகியவற்றால் ஏற்படும் தாக்கத்திலிருந்து நுகர்வோர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கும் குறிக்கோளுடன் செயல்படுகிறது. நியாயமான வணிக நடைமுறைகளைக் கண்டறிந்து நெறிமுறைப்படுத்தப்படுவதன் மூலம் எவ்வித பாதிப்பும் இல்லாமல் நுகர்வோர்களைப் பாதுகாத்திட நுகர்வோரின் நலனுக்காக அரசால் பின்வரும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 இல் குறிப்பிடப்பட்டுள்ள நுகர்வோர்களுக்கான உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் பற்றிய விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்தி நுகர்வோருக்கு அதிகாரமளித்தல்.

2. நுகர்வோர்கள் சுரண்டப்படுவதிலிருந்து பாதுகாக்க, நுகர்வோர் குறைதீர் ஆணையங்களை அணுகுவதற்கு முன்னரே மாற்றுவழி மூலம் நுகர்வோர்களின் குறைகளைத் தீர்வு செய்தல்.

3. நுகர்வோர்களுக்குச் சேவைகள் வழங்கக்கூடிய அரசுத் துறைகளின் செயல்முறையை மேம்படுத்துவதற்குரிய கொள்கை மாற்றங்களைப் பரிந்துரை செய்தல்.

மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் சிறந்த முடிவுகளைப் பெற அரசு கீழ்க்கண்ட திட்டங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

## 2.1 குடிமக்கள் நுகர்வோர் மன்றம்

தமிழ்நாட்டில் பள்ளி / கல்லூரிகளில் தலா 50 உறுப்பினர்களைக் கொண்ட குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது 2000 குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆசிரியர் நிலையிலான ஒருங்கிணைப்பாளர் ஆகியோரைக் கொண்டு குடிமக்கள் நுகர்வோர் மன்றத்தின் பணிகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை வலியுறுத்தி நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. மாணவர்களின் உதவியுடன் அவர்களின் குடும்பங்களிலும் சமுதாயத்திலும் விழிப்புணர்வு ஏற்படுத்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

## 2.2 கருத்துப்பட்டறைகள் / கருத்தரங்குகள்

நுகர்வோர் உரிமைகள் குறித்து பல்வேறு கருத்துப்பட்டறைகள் / கருத்தரங்குகள் சீரான இடைவெளியில் நடத்தப்பட்டு வருகின்றன.

## 2.3 ஊடகங்கள் வழியே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகளைச் சிறப்பாக எடுத்துச்சொல்லும் காணொலி மற்றும் கேட்பொலி நிகழ்ச்சிகள் அரசால் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றன. மேலும், நுகர்வோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட அரசால் "தமிழ்நாடு நுகர்வோர் கவசம்" என்ற மாத இதழ் வெளியிடப்படுகிறது. இந்த இதழ் பொதுமக்கள் / நுகர்வோர், மக்களிடையே நேரடித் தொடர்பில் உள்ள அரசுத் துறைகள், குடிமக்கள். நுகர்வோர் மன்றங்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் மற்றும் அனைத்து நூலகங்களுக்கும் விநியோகம்

செய்யப்பட்டு வருகிறது. இந்த மாத இதழ் இந்திய செய்தித் தாள்களின் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டு ரூ.10/- என்ற விலையில் விநியோகிக்கப்படுகிறது.

## 2.4 மாநில நுகர்வோர் உதவி மையம்

நுகர்வோரின் குறைகளைத் தொலைபேசி வாயிலாகவும் கேட்டு களையும் பொருட்டு, ஒரு மாற்று குறைதீர் அமைப்பாக மாநில நுகர்வோர் உதவி மையம் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. நுகர்வோர் தங்களது குறைகள் குறித்து இம்மையத்தினைத் தொடர்பு கொண்டு, அதற்கான தெளிவுரைகள் மற்றும் தீர்வு பெறுவதற்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன. இம்மையத்தினை 044- 2859 2828 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது www.consumer@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். மேலும், www.consumer.tn.gov.in என்ற இணையதளத்தில் உள்ள

இணையவழி புகார் பதிவு மூலமாகவும் நுகர்வோர் தங்களது புகாரினைப் பதிவு செய்யலாம்.

## 2.5 மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களின் செயல்பாடுகள்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் படி, மாநில மற்றும் மாவட்ட அளவில் நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இக்குழுவின் கூட்டம் ஆண்டுக்கு இருமுறை கூட்டப்பட்டு, அதில் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நுகர்வோரின் நலன் குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு வருகிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு குழுவின் தலைவராக செயல்படுவார். மேலும், மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அலுவலராக மாவட்ட வழங்கல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசு மற்றும் தனியார் துறைகள் சார்ந்த

நுகர்வோர்களின் பிரச்சினைகள் குறித்து தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் காலாண்டுக்கு ஒரு முறை கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 2.6 தேசிய நுகர்வோர் தினவிழா மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தினவிழா கொண்டாடுதல்

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 24 தேசிய நுகர்வோர் நாளாகவும், மார்ச் 15 உலக நுகர்வோர் உரிமைகள் நாளாகவும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. கல்வி நிறுவனங்களில் செயல்பட்டு வரும் "குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள்" மாணவர்கள் மூலம் மாவட்ட அளவில் கண்காட்சிகள், பேரணிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரக் கூட்டங்கள் அரசால் நடத்தப்பட்டு, நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

## 2.7 தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி (TNSCWF)

நுகர்வோர் நடவடிக்கைகளுக்காக ஒன்றிய, மாநில அரசுகள் தலா ரூ.50.00 இலட்சம் (50:50) பங்களிப்புடன் ரூ.1.00 கோடி அளவில் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதித் தொகுப்பினை உருவாக்கியுள்ளது. மாநில / மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் வசூலிக்கப்படும் அபராதத்தொகையும், கட்டணத்தொகையும் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி தொகுப்பில் செலுத்தப்பட்டு வருகிறது.

மேலும், ஒன்றிய, மாநில அரசுகளின் பங்களிப்பு 75:25 என்ற விகிதத்தில் 10 கோடி ரூபாய் நிதியம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு தனது பங்காக ரூ.2.5 கோடி செலுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் பங்கான ரூ.7.5 கோடி எதிர்நோக்கப்படுகிறது. தற்போது இந்த நிதியம் ரூ.20 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய நிதியம் மற்றும் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதி ஆகியவற்றிலிருந்து வரும் வட்டித் தொகையினைக் கொண்டு நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.8 தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல் சங்கம் (TANSSCOPE)

நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளைத் திறம்பட செயல்படுத்திட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரைத் தலைவராகவும், அரசு மற்றும் அரசு சாரா துறையில் உள்ளவர்களை உறுப்பினர்களாகக் கொண்டும் தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளித்தல் சங்கம் எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## 2.9 மாநில மற்றும் மாவட்ட அளவிலான நுகர்வோர் குறைதீர் வழிமுறைகள்

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019, நுகர்வோர் உரிமைகளை நிலைநாட்டி நுகர்வோர் பாதுகாப்பினை உறுதிசெய்யும் சமூக நலனுக்கான சட்டமாகும். இச்சட்டம் சாதாரண மக்கள் தங்களுடைய குறைகளைக் குறைந்த செலவிலும், விரைவாகவும் தீர்க்க வழிவகை செய்துள்ளது. அமைப்பு ரீதியான உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் மற்றும் சேவை வழங்குபவர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு வந்த நிலையில், நுகர்வோர் தான் பொருட்களை கவனமாக பார்த்து வாங்க வேண்டும் என்கிற நிலையை மாற்றி விற்பவரும் பொருட்களை முறையாக விற்க வேண்டும் என்கிற நிலைக்கு இச்சட்டம் அழைத்துச் சென்று, "நுகர்வோர் ஜாக்கிரதை" என்ற நிலையைக் கடக்கச் செய்துள்ளது.

இச்சட்டம், தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவிலான மூன்றடுக்கு கொண்ட நீதிவழங்கும் நுகர்வோர் குறைதீர் அமைப்பிற்கு வழிவகை செய்துள்ளது:-

1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்
2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்

## 2.10 தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்

தேசிய ஆணையம் புது தில்லியில் இயங்கும் நீதிமுறைச் சார்புடைய தலைமை ஆணையமாகும். பொருள் அல்லது சேவையின் மதிப்பு ரூ.10 கோடிக்கு மேல் தொடர்புடைய வழக்குகள் இந்த ஆணையத்தினால் விசாரணை செய்யப்படும். மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தீர்ப்புகளின் மீதான மேல்முறையீடு மற்றும் மறுஆய்வு அமைப்பாகவும் இந்த ஆணையம் செயல்படும்.

### 2.11 மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

பொருள் அல்லது சேவையின் மதிப்பு ரூ.1 கோடி முதல் ரூ.10 கோடி வரையுள்ள வழக்குகள் இந்த ஆணையத்தினால் விசாரணை செய்யப்படும். இவ்வாணையம் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியைத் தலைவராகவும், இரண்டு நீதிமுறைசார் உறுப்பினர்களும், இரண்டு நீதிமுறை சாரா உறுப்பினர்களும் அவற்றில் ஒரு பெண் உறுப்பினரையும் கொண்ட அமைப்பாகும். பதிவாளர் நிர்வாகத் துறையின் தலைவராகச் செயல்பட்டு வருகிறார். தென் மாவட்டங்களின் நுகர்வோர் நலன் கருதி, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் கிளையானது மதுரையில் 11.08.2012 முதல் செயல்பட்டு வருகிறது.

மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை சுற்றுக் கிளை ஆகியவை அந்தந்த மாவட்ட நுகர்வோர்

குறைதீர் மன்றங்களின் தீர்ப்புகளின் மீதான மேல்முறையீடு மற்றும் சீராய்வு மனுக்களைத் தீர்வு செய்யும் அதிகாரம் கொண்டதாகும்.

**2.12 மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்**

பொருள் அல்லது சேவைகளின் மதிப்பு ரூ.1 கோடிக்கும் குறைவாக உள்ள நேர்வுகளில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் நுகர்வோர் நிவாரணம் கோரி வழக்குத் தொடரலாம். புதிதாக இயற்றப்பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-இன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் இருக்க வேண்டும். மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியை தலைவராகக் கொண்டு இரு உறுப்பினர்களுடன் செயல்படுகிறது. அவற்றுள் ஒருவர் பெண் உறுப்பினராக இருக்க வேண்டும். மாவட்ட மன்றங்கள்

தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை 1,26,697 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதில் 1,15,116 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன.

**2.13 சமரச மையம்**

நுகர்வோரின் நன்மைகளைக் கருதி மாற்று முறையில் தீர்வுகாண சமரச மையம் 15.12.2011 முதல் செயல்பட்டு வருகிறது. இம்மையம், பயிற்றுவிக்கப்பட்ட நடுநிலையான மூன்றாம் நபரினை நடுவராகக் கொண்டு தீர்வு காண வழிவகை செய்கிறது. இந்த நடுவர் வாதி, பிரதிவாதியான இருதரப்புக்கும் திருப்தி அளிக்கும் வகையில் கட்டணம் ஏதுமின்றி எளிதான முறையில் தீர்வு காண உதவுவார்.

**2.14 எதிர்காலத் திட்டம்**

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் மாநில ஆணையத்தின் செயல்பாடுகள் தடைபடா வண்ணம்,

காணொளி வாயிலாக வழக்கு விசாரணை நடத்த உயர்தர மின்திரை அமைத்து இணையவழியில் புகார் அளிக்கும் வசதியுடன் நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு குறைதீர் ஆணையம் செயல்பட வழிவகை காணப்பட்டு வருகிறது. மாநில ஆணையத்தில் நேரடி விசாரணைகள் நடைபெறும் காலங்களில். ஆணையத்தின் மன்றங்களில் மக்கள் நெருக்கத்தினைத் தவிர்க்கும் பொருட்டு நிகழ்நிலை - டிஜிட்டல் - காட்சிப் பலகைகள் பொருத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமரசத்தின் வாயிலாக தீர்வு காண்பதற்கு ஏதுவாக சமரச மையங்கள் மட்டுமின்றி, மாநில ஆணையம், மதுரை சுற்றுக்கிளை மற்றும் மாவட்ட ஆணையங்களில் சமரசப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்தி நடுவர்களை அமர்த்தி விரைவாக வழக்குகளை முடிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது 12 மாவட்ட ஆணையங்கள் சொந்தக் கட்டிடத்திலும், 21 மாவட்ட ஆணையங்கள் வாடகைக் கட்டிடத்திலும் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட ஆணையங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்காக கட்டணமின்றி நிலம் பெற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதிகள் வாயிலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# இயல் - 3

## விலைக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

வெளிச்சந்தையில் நியாய விலையில் உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்திட உணவுப் பொருள் வழங்கல் ஆணையரகத்தில் "விலைக்கண்காணிப்புப் பிரிவு" ஆணையர் தலைமையில் இயங்கி வருகிறது. அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் வகைகள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட உணவுப்பொருட்களின் சில்லரை மற்றும் மொத்த விலைகளை இப்பிரிவு அன்றாடம் கண்காணித்து வருகிறது.

### 3.1 தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்

- மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில்

விலைக்கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

- வெளிச்சந்தையில் இன்றியமையாப் பொருட்களின் விலை ஏறும்போது விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ரூ.100 கோடி மதிப்பில் விலைக் கட்டுப்பாட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டு இன்றியமையாப் பொருட்களின் விலையேற்றத்தின் போது ஏற்படும் நெருக்கடிகளைச் சமாளிக்கப் பயன்படுத்தப்படுகிறது.
- இன்றியமையாப் பொருட்களின் விலை விவரங்களைத் தொடர்ந்து கண்காணித்து, விலையில் திடீர் உயர்வு ஏற்படின் உடனடியாக அரசுக்குத் தெரிவிக்கும் பணியினை, விலைக் கண்காணிப்புப் பிரிவு மேற்கொள்கிறது.
- வெளிச்சந்தையில் விலை ஏற்றத்தினால் பாதிக்கப்படக்கூடிய மக்களைக் காக்கும் வகையில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சிறப்புப்

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.30/-க்கும், ஒரு லிட்டர் பாமாயில் ரூ.25/-க்கும் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

# இயல் - 4

## அமலாக்கம்

### முன்னுரை

அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை அமல்படுத்த இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955 மற்றும் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம், 1980 ஆகிய இரு சட்டங்களையும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அமல்படுத்தி வருகிறது. தொடர்ந்து கடத்தலில் ஈடுபடும் நபர்களைத் தடுப்புக் காவலில் வைக்க கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம் வழிவகை செய்கிறது.

கூடுதல் காவல் துறை இயக்குநர் இத்துறையின் தலைவராகவும், அவரின் கீழ் சென்னை மண்டலத்தில் ஒரு காவல் கண்காணிப்பாளரும், மதுரை மண்டலத்தில் ஒரு காவல்

கண்காணிப்பாளரும், சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை உட்கோட்டங்களை தலைமையிடமாகக் கொண்டு நான்கு காவல் துணைக் கண்காணிப்பாளர்களும் பணிபுரிகின்றனர். குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் 34 அலகுகளில் காவல் ஆய்வாளர்கள் தலைமையில் 22 அலகுகளும், உதவி காவல் ஆய்வாளர் தலைமையில் 12 அலகுகளும் இயங்கி வருகின்றன. தலைமையிடத்தில் நிர்வாகம் மற்றும் நுண்ணறிவுப் பிரிவுகளில் இரண்டு காவல் ஆய்வாளர்களும் பணியாற்றுகின்றனர். கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து எல்லையோர மாவட்டங்களில் ஐந்து சிறப்பு சுற்றுக் காவல் படைகள் இயங்கி சட்ட அமலாக்கத்தை உறுதி செய்கின்றன.

## 4.1 குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் நடவடிக்கைகள்

பொது விநியோகத் திட்ட பொருட்களைக் கடத்துபவர்களையும், பதுக்குபவர்களையும் இரும்புக் கரம் கொண்டு அடக்க பல்வேறு நடவடிக்கைகளைக் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை எடுத்து வருகிறது. தொடர் விழிப்பு நடவடிக்கைகளினாலும், சட்டங்களைக் கண்டிப்புடன் அமல்படுத்தியதன் விளைவாகவும் 07.05.2021 முதல் 17.08.2021 வரை 2,144 வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

இதில் பொது விநியோகத் திட்ட அரிசி கடத்தல் தொடர்பாக 1,918 வழக்குகளும், மண்ணெண்ணெய் கடத்தல் தொடர்பாக 66 வழக்குகளும், வீட்டு சமையல் எரிவாயு உருளைகளை வர்த்தகப் பயன்பாட்டிற்கு பயன்படுத்தியதற்காக 109 வழக்குகளும், இதர இனங்களில் 51 வழக்குகளும் பதியப்பட்டுள்ளன. மேற்கூறிய வழக்குகளில் 1,255 மெ.டன்

பொது விநியோகத்திட்ட அரிசி மற்றும் 7,673 லிட்டர் மண்ணெண்ணெய் கைப்பற்றுகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய வழக்குகளில் கைப்பற்றப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.2,02,19,170/- (ரூபாய் இரண்டு கோடியே இரண்டு லட்சத்து பத்தொன்பதாயிரத்து நூற்று எழுபது மட்டும்) ஆகும். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 231 நான்கு சக்கர வாகனங்களும், 20 மூன்று சக்கர வாகனங்களும், 109 இரு சக்கர வாகனங்களும் ஆக மொத்தமாக 360 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கள்ளச்சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் 27 நபர்கள் தடுப்புக் காவலில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் பொருட்களைப் பொது மக்களிடம் முறையாக கொண்டு சேர்த்திடும் பொருட்டு கடத்தல் மற்றும் பதுக்கலைத் தடுக்க

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை புதுப்பொலிவுடனும், உத்வேகத்துடனும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

# இயல் - 5

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

**முன்னுரை**

பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்து, சேமித்து, விநியோகிக்கும் உன்னதப் பணிகளை மேற்கொண்டிட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டில் அன்றைய மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மாநிலத்தில் வசிக்கும் மக்களின் உணவு பாதுகாப்பினை உறுதி செய்வதில் மிக முக்கியமான பங்கு வகிக்கும் இதுபோன்ற அமைப்பை நாட்டிலேயே முதன் முதலில் அமைத்த பெருமைக்குரியது தமிழ்நாடு.

நிறுவனங்கள் சட்டம், 1956 சட்டப்பிரிவு 25-ன் கீழ் (நிறுவனங்கள் சட்டம், 2013 சட்டப்பிரிவு 8), இந்நிறுவனம்

“தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்” என்ற பெயரில் 01.04.2010 அன்று பதிவு செய்யப்பட்டது.

**5.1 நிறுவனக் கட்டமைப்பு**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களை இயக்குநர்களின் குழுமத்தின் தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது.

இந்நிறுவனம் 33 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, முதுநிலை மண்டல மேலாளர்கள் / மண்டல மேலாளர்கள் தலைமையில் இயங்கி வருகிறது. இக்கழகத்தின் தலைமை அலுவலகம், மண்டல அலுவலகங்கள், கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், நியாய விலைக்கடைகள் மற்றும் மாநிலம் முழுவதிலும் உள்ள பல்பொருள் அங்காடிகள் ஆகியவற்றில் 7,293 நிரந்தர பணியாளர்களும், 5,111 பருவ கால பணியாளர்களும்

பணியாற்றி வருகின்றனர். இது தவிர, கழக கிடங்குகள், நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் மற்றும் நவீன அரிசி ஆலைகளில் 5,199 சுமைதூக்கும் தொழிலாளர்களும் 27,845 பருவ கால சுமைதூக்கும் தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர்.

**5.2 நிறுவனத்தின் செயல்பாடுகள்**

பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயல்பட அரிசி, சர்க்கரை, கோதுமை, பருப்பு வகைகள், பாமாயில் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, சேமித்து, விநியோகம் செய்தல் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். இன்றியமையாப் பொருட்களின் சேமிப்பு மற்றும் விநியோகம் இந்நிறுவனத்தின் கீழ்க்கண்ட கட்டமைப்பு வசதிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அ) 13.39 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 296 கிடங்குகள்

ஆ) 1,455 நியாயவிலைக் கடைகள் (1,246 முழு நேர மற்றும் 209 பகுதி நேர நியாய விலைக் கடைகள்)

இ) 21 நவீன அரிசி ஆலைகள்

ஈ) 94 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

உ) 3 பெட்ரோல் / டீசல் வழங்கும் நிலையங்கள்

ஊ) 36 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள்

எ) 4 சமையல் எரிவாயு விநியோகிக்கும் முனையங்கள்

ஏ) 2,654 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள்

## 5.3 இன்றியமையாப் பொருட்களின் கொள்முதல்

### 5.3.1 அரிசி

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-இன்படி இந்திய உணவுக் கழகத்தின் மூலம் மத்திய தொகுப்பு ஒதுக்கீட்டிலிருந்தும், நவீன அரிசி ஆலைகளில் நெல் அரவை

மூலமாகவும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் அரிசி பெறப்படுகிறது.

மாநிலத்தின் பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர நலத் திட்டங்களுக்கான மாதாந்திர அரிசி தேவை 3.25 இலட்சம் மெ.டன் ஆகும். அந்தியோதயா அன்னயோஜனா, முன்னுரிமைப் பிரிவு மற்றும் ஈடு செய் பிரிவுகளின் கீழ் ஒன்றிய அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஒதுக்கீடான 2.76 இலட்சம் மெ.டன் அரிசியை மாநில அரசு முழுமையாகப் பயன்படுத்துகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படும் அரிசிக்கும், ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசிக்கும் இடையேயான பற்றாக்குறையானது ஒன்றிய அரசின் வெளிச்சந்தை விற்பனைத் திட்டத்தின் மூலமாகவும், வெளி மாநிலங்களில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகங்களின் மூலமாகவும்

தேவையான அளவு அரிசியைக் கொள்முதல் செய்து ஈடு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் அரவை செய்து பெறப்படும் அரிசியும், இந்திய உணவுக் கழகக் கிடங்குகளிலிருந்து பெறப்படும் அரிசியும், மாதாந்திர ஒதுக்கீட்டின்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நகர்வு செய்யப்படுகிறது. 31.07.2021 அன்றைய நிலவரப்படி, இந்திய உணவுக் கழகத்தின் 57 கிடங்குகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில், 11.15 இலட்சம் மெ-டன் அரிசி மற்றும் 15.47 இலட்சம் மெ.டன் நெல் கையிருப்பு உள்ளது.

**5.3.2 சர்க்கரை**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப்

பொருட்களில் சர்க்கரையும் முக்கியமான ஒன்றாகும். பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தோராயமாக 32,000 மெ.டன் சர்க்கரை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அந்தியோதயா அன்னயோஜனா அல்லாத குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ரூ.25/- என்ற மானிய விலையிலும், அந்தியோதயா அன்னயோஜனா குடும்ப அட்டைதாரர்களுக்கு கிலோ ரூ.13.50 என்ற விலையிலும் சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது. சர்க்கரை கொள்முதல் விலைக்கும், மானிய விலைக்கும் உள்ள வேறுபாட்டுச் செலவினத் தொகையான ரூ.469.45 கோடியை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது.

**5.3.3 கோதுமை**

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-இன்படி ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு மாதந்தோறும் 30,647.933 மெ.டன் கோதுமையினை ஆகஸ்ட்-2020 முதல் ஒதுக்கீடு

செய்து வருகிறது. அதன்படி கோதுமை இருப்பின் அடிப்படையில், அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களின் விருப்பத்திற்கேற்ப அரிசிக்குப் பதிலாக கோதுமை விலையில்லாமல் வழங்கப்படுகிறது.

### 5.4 சிறப்பு பொது விநியோகத் திட்டம்

பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் வெளிச்சந்தை விலையினைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களுக்கு ஊட்டச் சத்துமிக்க உணவுப் பொருட்களை வழங்கும் நோக்குடனும், மானிய விலையில் பருப்பு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமாயில் எண்ணெய் வழங்கும் சிறப்பு பொது விநியோகத் திட்டம் 2007 ஆம் ஆண்டில் அன்றைய மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாதமும் 20,000 மெ.டன் கனடா மஞ்சள் பருப்பு /

துவரம் பருப்பு மற்றும் 2,00,00,000 லிட்டர் (பாக்கெட்டுகள்) செறிவூட்டப்பட்ட பாமாயில் எண்ணெய் கொள்முதல் செய்யப்பட்டு மிகவும் குறைந்த விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான மானியச் செலவினம் முழுவதையும், தமிழக அரசு ஏற்று வருகிறது.

சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கனடா மஞ்சள் பருப்பு / துவரம் பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவற்றின் விலை விவரம் பின்வருமாறு.

| விவரம் | மாதாந்திர ஒதுக்கீடு (பருப்பு மெ.டன்னில் மற்றும் பாமாயில் பாக்கெட்டு களில்) | குடும்ப அட்டைதாரர் களுக்கு வழங்கப்படும் அளவு | விற்பனை விலை (பருப்பு / கிலோ மற்றும் பாமாயில் பாக்கெட் / லிட்டர்) | வெளிச் சந்தை விலை |
|---|---|---|---|---|
| கனடா மஞ்சள் பருப்பு/ துவரம் பருப்பு | 20,000 | 1 கிலோ | ரூ.30/- | ரூ.95/- முதல் ரூ.105/- வரை |
| செறிவூட்டப்பட்ட பாமாயில் எண்ணெய் | 2,00,00,000 | 1 லிட்டர் (910 கிராம்) | ரூ.25/- | ரூ.120/- முதல் ரூ.130/- வரை |

## 5.5 நியாவிலைக் கடைகளுக்கு இன்றியமையாப் பொருட்களை இயக்கம் செய்தல்

நியாயவிலைக் கடைகளில் இன்றியமையாப் பொருட்களின் தொடர் இருப்பினை உறுதி செய்யும் வகையில் நியாய விலைக் கடைகளுக்கான மாதாந்திர ஒதுக்கீட்டில் 60 விழுக்காட்டுப் பொருட்கள் முந்தைய மாதம் 30 ஆம் தேதிக்குள் முன்நகர்வு செய்யப்படுகின்றன. மீதம் உள்ள 40 விழுக்காட்டுப் பொருட்கள் நடப்பு மாதம் 20 ஆம் தேதிக்குள் நகர்வு செய்யப்படுகின்றன. கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு இன்றியமையாப் பொருட்களை நகர்வு செய்யும் பணியினை முழுமையாக முடிக்கும் பொருட்டு நடப்பு மாதத்திற்கான நகர்வுப் பணிகள் முடிந்தபின் முன்நகர்வு பணியினைத் துவக்குவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

## 5.6 விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல்

பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் இந்திய உணவுக் கழகத்தின் முகவராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்டு, 2002 - 2003 ஆம் ஆண்டு கரீப் கொள்முதல் பருவத்திலிருந்து முகவராகச் செயல்பட்டு வருகிறது. காவிரி பாசன மாவட்டங்களைத் தவிர பிற மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்ய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் (NCCF) ஆகியவற்றிற்கு அரசால் அனுமதியளிக்கப் பட்டுள்ளது. கரீப் 2021-22 கொள்முதல் பருவத்தில், ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலை மற்றும் தமிழ்நாடு அரசால் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட ஊக்கத் தொகை விவரங்கள் பின்வருமாறு:

| ரகம் | ஒன்றிய அரசு வழங்கும் குறைந்தபட்ச ஆதாரவிலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) | தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத் தொகை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) | விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலை குவிண்டால் ஒன்றுக்கு (ரூபாயில்) |
|---|---|---|---|
| சன்னரகம் (Grade A) | 1,960/- | 100/- | 2,060/- |
| சாதாரண ரகம் (Common) | 1,940/- | 75/- | 2,015/- |

கரீப் 2020-21 ஆம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் விவரம்:

| கரீப் | திறக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் | சன்னரகம் (மெ.டன்) | சாதாரண ரகம் (மெ.டன்) | நெல் கொள்முதல் செய்யப்பட்ட மொத்த அளவு (மெ.டன்) | விலை குவிண்டால் (ரூபாயில்) | | பயனாளிகளின் எண்ணிக்கை (விவசாயிகள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சன்ன ரகம் | சாதாரண ரகம் | |
| 2020-21 (31.07.2021) | 2,654 | 27,12,212 | 12,27,423 | 39,39,635 | 1,958 | 1,918 | 7,41,039 |

கரீப் பருவம் 2020-21 ஆம் ஆண்டிற்கு மின்னணு பரிவர்த்தனை மூலம் 31.07.2021 வரை விடுவிக்கப்பட்ட தொகை ரூ.7,664.71 கோடி ஆகும்.

கொள்முதல் விவரங்கள் 2020-21(மெ.டன்னில்)

(31.07.2021 நிலவரப்படி)

| | |
|---|---|
| தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | : 37,69,101 |
| தேசியக் கூட்டுறவு நுகர்வோர் இணையம் | : 1,49,198 |
| கூட்டுறவுத் துறை | : 21,336 |
| | 39,39,635 |

ரூபாய்.251.22 கோடி மாநில அரசின் ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் அமைத்தல், நெல் கொள்முதல் செய்வதற்கான வழிமுறைகள், நெல் சேமித்து வைத்தல் மற்றும் நகர்வு செய்தல் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை முதல்முறையாக அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இதற்காக கீழ்க்கண்ட அலுவலர்களைக்

கொண்ட மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

1. மாவட்ட ஆட்சித்தலைவர் - தலைவர்
2. நேர்முக உதவியாளர் (வேளாண்மை) - கூட்ட அழைப்பாளர்
3. இணை இயக்குநர், வேளாண்மைத்துறை
4. முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
5. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர்,
6. விவசாயிகள் சார்பாக இரு பிரதிநிதிகள்.

மேற்கூறிய குழு, தேவைக்கேற்ப நேரடி நெல்கொள்முதல் நிலையங்களைத் திறக்கவும், விவசாயிகளின் குறைகளை அவ்வப்போது தீர்க்கவும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் செயல்திறனை மேம்படுத்த உதவும்.

**5.6.1 கண்டுமுதல் அரிசி**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 52,500 மெ.டன் அரவைத் திறனுள்ள 21 நவீன அரிசி ஆலைகள் இயங்கி வருகின்றன. கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினை அரிசியாக மாற்றி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு ஏதுவாக 6,11,291 மெ.டன் அரவைத் திறன் கொண்ட 376 தனியார் அரவை முகவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் பதிவு செய்துள்ளனர். நெல் கொள்முதல் செய்வதிலிருந்து அரிசியாக மாற்றப்படுவது வரை ஆகும் செலவினத் தொகையினை ஒன்றிய அரசு நிர்ணயித்த பொருளாதார விலையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு மானியமாக பெறப்பட்டு வருகிறது.

தரமான அரிசி வழங்கும் பொருட்டு நிறம் பிரிக்கும் இயந்திரங்களை நிறுவ தனியார் அரவை முகவர்களுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

அறிவுறுத்தியுள்ளதுடன் அந்நிறுவனம் நடத்தும் நவீன அரிசி ஆலைகளில் அந்த இயந்திரங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5.7 அடிப்படை கட்டமைப்பு மற்றும் சொத்துக்கள்

### 5.7.1 சேமிப்புக் கிடங்குகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்தம் 296 சேமிப்பு கிடங்குகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவற்றில் 11.83 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 255 கிடங்குகள் கழகத்திற்குச் சொந்தமானதாகும். மீதமுள்ள 1.56 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 41 கிடங்குகள் வாடகை அடிப்படையில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பயன்படுத்தப்- படுகிறது. பொது விநியோகத் திட்டப் பொருட்களைப் பாதுகாப்பாக சேமித்து

வைப்பதை உறுதிப்படுத்தவும், அதன் சேமிப்புக் கொள்ளளவினை மேம்படுத்தவும், அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

### 5.7.2 நவீன நெல் சேமிப்புக் கிடங்கு சைலோ

நெல் சேமித்து வைக்கும் பொருட்டு மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள எருக்கூர் கிராமத்தில் 50,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட நவீன நெல் சேமிப்புக் கிடங்கு ரூ.64.27 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. இதை விரைவில் முழுப் பயன்பாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 5.8 நியாய விலைக் கடைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் மொத்தம் 1,455 நியாய விலைக் கடைகள் 26 மண்டலங்களில் செயல்பட்டு வருகின்றன. இதில்

51 கடைகள் சொந்தக் கட்டடங்களிலும் 711 கடைகள் தனியார் கட்டடங்களிலும் 693 கடைகள் பிற அரசு துறை கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அடுத்த மூன்றாண்டுகளில் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5.9 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

விவசாயிகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளுக்கேற்ப தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன. பொதுவாக, ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையமும் சுமார் 30 சென்ட் முதல் 40 சென்ட் பரப்பளவில் குறைந்தபட்சம் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு சேமிப்பு வசதி, உலர்களம், நெல் தூற்றும்

இயந்திரம், மின்னணு தராசு, ஈரப்பதமானி ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளன.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு சொந்தக் கட்டடங்களில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரும் நடவடிக்கை படிப்படியாக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 550 நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் ஏற்கனவே சொந்தக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

**5.10 நெல் உலர்களம் அமைத்தல்**

அரசு வரையறுத்துள்ள ஈரப்பத அளவிற்கு நெல்லினை உலர்த்துவதற்கும், நெல்லினைச் சுத்தப்படுத்தி தரம் பிரிப்பதற்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால்

ரூ.32.20 கோடி மதிப்பீட்டில் 399 நெல் உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**5.11 நவீன அரிசி ஆலைகள்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் 52,500 மெ.டன் மாதாந்திர அரவைத் திறன் கொண்ட 21 நவீன அரிசி ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. 15 நவீன அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசியும், 6 நவீன அரிசி ஆலைகளில் பச்சரிசியும் அரவை செய்யப்படுகிறது. அரவைத் திறனை அதிகரிக்கவும், அரிசியின் தரத்தை மேம்படுத்திடவும், அனைத்து நவீன அரிசி ஆலைகளும் படிப்படியாக, நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.26.27 கோடி செலவிலும், இரண்டாவது கட்டமாக 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.32.60 கோடி செலவிலும், நவீனமயமாக்கப்பட்டுள்ளன. மூன்றாவது

கட்டமாக மீதமுள்ள 7 நவீன அரிசி ஆலைகள் ரூ.36.00 கோடி செலவில் நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன.

## 5.12 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளை இயந்திரமயமாக்குதல்

தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 11.83 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 255 சொந்தக் கிடங்குகள் செயல்பாட்டில் உள்ளன. பொது விநியோகத் திட்டப் பொருட்களை ஏற்றுதல், இறக்குதல், நகர்வு செய்தல் மற்றும் தேவையான உயரத்திற்கு அட்டியிடுதல் ஆகிய பணிகள் தற்பொழுது சுமை தூக்குவோரால் கையாளப்படுகின்றன. பொது விநியோகத் திட்ட பொருட்கள் தவிர சிமெண்ட் மூட்டைகள் போன்றவற்றையும் இவர்கள் கையாளுகின்றனர். மேலும், கொள்முதல் செய்யப்படும் பொருட்களைக் கிடங்குகளில் இறக்குதல், எடையிட்டுத் தைத்துச் சிப்பமிடுதல் போன்ற இதர பணிகளையும்

மேற்கொள்கின்றனர். தற்போதுள்ள மனிதத் திறனைக் கொண்டு பொருட்களைக் கையாளுவதைத் திறம்படச் செய்திட கிடங்குகளின் செயல்பாட்டினை இயந்திரமயமாக்குவது அவசியமான ஒன்றாகும். ஆதலால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில் தானியங்கி இழுவை இயந்திரங்கள் (Conveyors), சுமையினை ஏற்றி இறக்கி அட்டியிடும் இயந்திரங்கள் (Stackers), மின்னாக்கிகள் (Generators), மின்னாக்கி கொட்டகை போன்றவற்றை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 5.13 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படும் இதர சேவைகள்

### 5.13.1 அமுதம் பல்பொருள் அங்காடிகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொது மக்களின் பயன்பாட்டிற்காக 94 அமுதம் பல்பொருள்

அங்காடிகளை நடத்தி வருகிறது. பொதுமக்களால் வெகுவாக பயன்படுத்தப்படும் அரிசி, சர்க்கரை, பருப்பு வகைகள், தானியங்கள் போன்ற பொருட்களை நியாயமான விலையில் விற்பதன் மூலம் இந்த பொருட்களின் விலையேற்றத்தினை வெளிச்சந்தையில் கட்டுப்படுத்துகிறது.

### 5.13.2 பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நெய்வேலி, திருப்பத்தூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 5.13.3 சமையல் எரிவாயு விநியோக நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திருச்சி, திருவண்ணாமலை, இராமநாதபுரம் மற்றும் மண்டபம் ஆகிய

இடங்களில் சமையல் எரிவாயு விநியோக முகவராக செயல்பட்டு வருகிறது.

### 5.13.4 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 14 மண்டலங்களில் 36 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. இவற்றுள் 27 சில்லரை விற்பனை நிலையங்களாகவும், 8 சில்லரை மற்றும் மொத்த விற்பனை நிலையங்களாகவும், ஒன்று மட்டும் மொத்த விற்பனை நிலையமாகவும் செயல்படுகின்றன.

### 5.13.5 பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடிகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 7 பண்ணைப் பசுமை நுகர்வோர் அங்காடிகளைச் சென்னையில் நடத்தி வருகிறது.

### 5.13.6 அம்மா உணவகத்திற்கு உணவுப் பொருட்கள் வழங்குதல்

அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் அம்மா உணவகங்களுக்கு அரிசி மற்றும் கோதுமை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

## 5.14. இதர இணைச் சேவைகள்

### 5.14.1 நியாய விலையில் சிமெண்ட் விநியோகத்திட்டம்

இத்திட்டத்தின் மூலம் ஏழை மற்றும் நடுத்தர குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் 50 கிலோ சிமெண்ட் மூட்டை சலுகை விலையில் ரூ.216/- என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு முகமையான தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சிமெண்ட் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### 5.14.2 உப்பு விற்பனை

அயோடின் குறைபாடுகளால் ஏற்படும் நலிவுகளைக் களைந்திட பொது மக்களின் பயன்பாட்டிற்கு சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு, இருமடங்கு செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் குறைந்த அளவு சோடியம் உப்பு ஆகிய மூன்று விதமான உப்புகள் தமிழ்நாடு உப்பு நிறுவனம் மூலம் பெறப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் அமுதம் நியாயவிலைக் கடைகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலமாக பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

### 5.14.3 ஊட்டித் தேயிலை மற்றும் டான்டீ தேயிலை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடைகள் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலம் ஊட்டி தேயிலை தூள் 100 கிராம் ரூ.22/- என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், டான்டீ

தேயிலை தூள் 100 கிராம் ரூ.21/- என்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

## 5.15 தகவல் தொழில் நுட்ப முன்னெடுப்புகள்

### 5.15.1 மின் ஆளுமை

பொது விநியோகத் திட்டத்தின் கீழ், இன்றியமையாப் பொருட்களின் கொள்முதல் பணிகள் துவங்கி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் வரையிலான அனைத்து நடவடிக்கைகளையும் நிகழ் நேரத்தில் கண்காணிக்க ஏதுவாக பொது விநியோகத் திட்டம் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முழு விநியோகப் பணிகளும் குடும்ப அட்டைகள் மேலாண்மையும் எளிமையாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விவரம் G2G இணைய முகப்பு "http://g2g.tnpds.gov.in இல் பதிவு

செய்யப்பட்டு, நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் பெறப்பட்டதற்கான ஒப்புதல் விற்பனை முனைய இயந்திரம் மூலம் அளிக்கப்படுகிறது. கிடங்குகள் மற்றும் சில்லரை அங்காடிகளின் இன்றியமையாப் பொருட்களின் இருப்பு விவரம் மேலாண்மைத் தகவல் அமைப்பு இணைய முகப்பு http://mis.tnpds.gov.in இல் கண்காணிக்கப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் அனைத்து நிகழ்வுகள் குறித்த விவரங்கள் www.tnpds.gov.in என்ற பொது இணையதளத்தில் உள்ளன.

### 5.15.2 மின்னணு கொள்முதல்

சிறுகணினி உதவியுடன் டெல்டா மற்றும் இதர மாவட்டங்களிலுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மின்னணு கொள்முதல் சேவை செயல்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளிடமிருந்து பெறப்படும் நெல்லுக்கான கொள்முதல் தொகையினை மின்னணு

முறையில் (ECS) அவரவர் வங்கிக் கணக்கிலேயே வரவு வைக்கப்படுகிறது. தினசரி கொள்முதலின் விவரங்கள் http://nfpp.nic.in இணைய முகப்பின் மூலம் ஒன்றிய அரசுக்குப் பகிரப்படுகிறது.

### 5.15.3 மின்னணு கண்காணிப்பு

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து பொதுவிநியோகத் திட்டப் பொருட்களை நகர்வு செய்யும் வாகனங்களின் இயக்கம், கிடங்குகளின் செயல்பாடுகள் ஆகியவை செம்மையாக நடைபெறுவதை உறுதிப்படுத்திட மின்னணு கண்காணிப்பு முறை முழுமையாக அமல்படுத்தப்படும்.

### 5.16 தரக்கட்டுப்பாடு

அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் உள்ளிட்ட இன்றியமையாப் பொருட்களின்

தரத்தினை அளவிட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சிறந்த தரக்கட்டுப்பாட்டு அமைப்பினைக் கொண்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்டு கிடங்குகளில் சேமித்து வைக்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் மாதிரிகளைப் பரிசோதித்து அவ்வப்போது அவற்றின் தரம் உறுதி செய்யப்படுகிறது. இட நிர்வாகம் விஞ்ஞான முறையில் கையாளப்படுகிறது. சேமித்து வைக்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் தரத்தினைப் பாதுகாத்திடவும் சேமிப்பு இழப்பைத் தடுக்கவும், பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளித்தல் போன்ற தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உணவு தானியங்களின் 100 விழுக்காடு தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு, ஈரப்பதமானி, பகுப்பாய்வு செய்வதற்கான கருப்பு பாலிதீன் உறைகள், அட்டி அமைக்க இரும்பு மற்றும் பாலி பெல்லட் அட்டி கட்டைகள், புறஊதா கதிர் விளக்குப் பொறிகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து

தெளிப்பான் போன்ற உபகரணங்கள் கிடங்குகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**5.17 நிதிநிலை**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ரூ.100 கோடி அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தையும், ரூ.71.73 கோடி செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தையும் கொண்டுள்ளது.

2021-22 ஆம் நிதி ஆண்டிற்கு உணவு மானியமாக ரூ.8,437.57 கோடி மாநில அரசால் ஒதுக்கப்பட்டு, 31.07.2021 வரை ரூ.3,900 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

# இயல் - 6

## தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

### முன்னுரை

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், வேளாண் உற்பத்தி (மேம்பாடு மற்றும் சேமிப்புக் கிடங்கு) நிறுவனச் சட்டம், 1956 இன் படி 1958-ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் நாள் தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் 7.77 இலட்சம் மெ.டன் கொள்ளளவு கொண்டுள்ள 63 சேமிப்புக் கிடங்குகளைக் கொண்டு இயங்கி வருகிறது. இதில் 7.60 இலட்சம் மெ.டன் கொள்ளளவு 60 சொந்த சேமிப்புக் கிடங்குகளிலும், 0.17 இலட்சம் மெ.டன் கொள்ளளவு 3 வாடகைக் கிடங்குகளிலும் உள்ளது. வேளாண் உற்பத்திப் பொருட்கள், விதைகள், உரங்கள், இடுபொருட்கள் மற்றும் அரசு துறை, விவசாயிகள், கூட்டுறவுச் சங்கங்கள், உர நிறுவனங்கள்

மற்றும் பிற நிறுவனங்களுடைய பொருட்களை சேமித்து வைப்பதற்காக கிடங்கு வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 60 சேமிப்புக் கிடங்கு வளாகங்களில் 269 கிடங்குகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனம் 2020-21 ஆம் ஆண்டில் 82 விழுக்காடு இடவசதியைப் பயன்படுத்தியுள்ளது.

### 6.1 நிறுவன அமைப்பு

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 11 உறுப்பினர்களைக் கொண்ட இயக்குநர் குழுவின் மூலமாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் 5 இயக்குநர்கள் மாநில அரசால் பரிந்துரைக்கப்படுகின்றனர். மீதமுள்ள 5 இயக்குநர்கள் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்படுகின்றனர். கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம்,

திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 இடங்களில் முதுநிலை மண்டல மேலாளர் / மண்டல மேலாளர் தலைமையில் மண்டல அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. சேமிப்புக் கிடங்கு மேலாளரால் சேமிப்புக் கிடங்குகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**6.2 நிதிநிலைச் செயல்பாடு**

2020-21 ஆம் நிதியாண்டின் மொத்த வருமானம் ரூ.81.44 கோடி (தணிக்கைக்கு முன்). இந்நிறுவனம், 2020-21 நிதியாண்டில் ரூ.26 கோடி (தணிக்கைக்கு முன்) நிகர லாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**6.3 ஆதாயப் பங்கு**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 2019-20 நிதியாண்டிற்கான நிகர இலாபத்தில் 30 விழுக்காட்டை ஈவுத் தொகையாக அறிவித்து, அதன்படி ரூ.7.23 கோடியினை

தமிழ்நாடு அரசிற்கும், மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கும் 50:50 என்ற விகிதாசார அடிப்படையில் வழங்கிட முடிவு செய்து, 2019-20 வருடத்திற்கான 50 விழுக்காடு இடைக்கால ஈவுத் தொகை மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு ரூ.1.67 கோடியும் (வரிக்குப் பின்) மற்றும் தமிழக அரசிற்கு ரூ.1.81 கோடியும் (வரியின்றி) வழங்கப்பட்டுள்ளது.

**6.4 பூச்சித் தடுப்பு நடவடிக்கைகள்**

இந்நிறுவன நடவடிக்கைகளில் பூச்சித்தடுப்புப் பணி முக்கியமான ஒன்றாகும். இந்நிறுவனம் பல்வேறு பொதுத்துறை மற்றும் தனியார் துறை வாடிக்கையாளர்களுக்கு பூச்சித் தடுப்புச் சேவைகளை வழங்கி வருகிறது. இந்நிறுவன பூச்சித் தடுப்புப் பிரிவானது எலி ஒழிப்பு, கரையான் தடுப்பு, கட்டுமானத்திற்கு முன்/ பின் கட்டிடங்களில் ஏற்படும் கரையான் அரிப்பு தடுப்பு, கொசு ஒழிப்பு மற்றும் பூச்சித் தடுப்புப்

பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் 2020-21 ஆம் ஆண்டில் பூச்சித்தடுப்புச் சேவைகள் வாயிலாக ரூ.57.36 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

**6.5 தரக்கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு**

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், கிடங்குகளில் வைத்துள்ள சரக்குகளின் தரத்தினைப் பாதுகாக்க உரிய கவனத்துடன் பொறுப்பெடுத்துக்கொள்கிறது. விஞ்ஞான முறைப்படி சரக்குகளைப் பாதுகாத்தல் மற்றும் நவீன தொழில்நுட்பம் மூலம் பூச்சித் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றில் இந்நிறுவனம் பெருமளவில் அனுபவம் பெற்றுள்ளது. விவசாய உற்பத்திப் பொருட்கள் சேமிப்பின்போது வீணாவதைத் தடுக்கும் பொருட்டு, இந்நிறுவன களப்பணியாளர்களுக்குப் பல்வேறு வகையான பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பல்வேறு வகைகளில் பயன்படுத்துவது குறித்து இந்திய தானிய சேமிப்பு மேலாண்மை

மற்றும் ஆய்வு நிறுவனம் மூலமாக விரிவான பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனம் கிடங்குகளில் வைத்துள்ள சரக்குகளின் இருப்பு இழப்பு, இடைநிலை இழப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணித்து அவற்றைக் குறைந்த நிலையில் இருக்குமாறு பராமரிக்க முழு முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதனால், 2020-21 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சராசரி இருப்பு இழப்பானது 0.07 விழுக்காடு ஆகும். இது நிர்ணயிக்கப்பட்ட இருப்பு இழப்பு அளவான 0.5 விழுக்காட்டைக் காட்டிலும் குறைவானதாகும்.

## 6.6 மாற்றத்தக்க சேமிப்புக்கிடங்கு ரசீதுகள் மூலம் கடன் பெறும் வசதி

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தனது சேமிப்புக் கிடங்குகளை சேமிப்புக் கிடங்கு வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவு செய்துள்ளது. 2020-21 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் 20 மாற்றத்தக்க

சேமிப்புக்கிடங்கு ரசீதுகளை வழங்கியுள்ளது. இந்த ரசீதுகளை வைத்து விவசாயிகள் மற்றும் வணிகர்கள் வங்கிகள் மூலம் ரூ. 22.75 இலட்சம் கடன் பெற்றுள்ளனர்.

**6.7 புதிய முயற்சிகள் 2021-22**

1. 2021-22 ஆம் ஆண்டில் சேமிப்புக் கிடங்குகளின் பயன்பாட்டினைப் பெருக்கிட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் ஆவின் நிறுவனங்களை அணுகியதின் விளைவாகப் பயன்பாடு அதிகரிக்கப்பட்டு கிடங்குகளின் இடவசதிப் பயனீட்டு அளவு கணிசமாக உயர்ந்துள்ளது.
2. மின்சாரத்தினைச் சேமிக்கும் பொருட்டு, ஆறு சேமிப்புக் கிடங்குகளில் (திருவாரூர், நாகப்பட்டினம், நாஞ்சிக்கோட்டை, முத்தூர், சேலம் மற்றும் தேனி) சூரிய ஒளித்தகடுகள் பொருத்தப்பட்டு மின்சாரம் சேமிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தமிழ்நாட்டில் குடிமக்கள் எவரும் பட்டினியுடன் உறங்கச் செல்வதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என்கிற கொள்கையில் தமிழக அரசு முழுமுனைப்புடன் உறுதியாக உள்ளது. அன்றைய மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொலைநோக்குப் பார்வையுடன் 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ், எதிர்வரும் காலங்களில் கூடுதல் சத்துள்ள உணவுத் தொகுப்பினை மக்களுக்கு அளிக்க வேண்டும் என்கிற முயற்சியினை இத்துறை எடுத்து வருகிறது.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

\- புறநானூறு

**அர. சக்கரபாணி**

**உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்**

**துறை அமைச்சர்.**



உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
மக்களின் உணர்வோடு உறவாடும் உணவுத்துறையின் சார்பில் 2021 மே 7 அன்று முதல்
அரசாணையில் கையொப்பமிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
2021 ஜூலை 3 அன்று உணவுத்துறை ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்கள்



பதினான்கு வகையிலான மளிகைப் பொருட்கள்!
தம் புகைப்படம் பை மீது தவிர்த்து மக்கள் மனதிலே இடம் பிடித்த
நற்செயலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த காட்சி!



மரபு நெல்லின் மாண்பு சொல்லும் வேளாண் பெருமக்களின்
கருத்துக்களைச் செவிமடுக்கும் மாண்புமிகு முதலமைச்சர்




**நியாய நாயகராய்  நியாய விலைக் கடைகளில்!**
**கருத்தில் விளைந்தது களத்தில் நடப்பதைக் கண்டு வழிகாட்டும்**
**மாண்புமிகு முதலமைச்சர்!**



கொரோனா துயர் துடைக்க பதினான்கு மளிகைப் பொருட்கள் மற்றும் ரூ.4,000 பொருளுதவி!
மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அலுவலர்கள்
சூழ பயன்பெற்று மகிழும் பயனாளிகள்



வேளாண்மைத் துறையும் உணவுத் துறையும் ஒன்றுக்கொன்று உதவும் துறைகள்!
இரு துறைகளின் மாண்புமிகு அமைச்சர்களும் தலைமைச் செயலாளரும் மாவட்ட
ஆட்சியர்களோடு காணொலி வாயிலாகக் கலந்துரையாடி நெல் கொள்முதல்
பணியினைச் சீராய்ச் செய்திட நடத்திய ஆய்வுக் கூட்டம் – 10.07.2021




சென்றிடுவீர் எட்டுத்திக்கும்! மக்களின் மனதறிந்து பணியாற்றுவீர்!
என்ற மாண்புமிகு முதலமைச்சரின் சொற்களைச் செயலாக்குவோம் என்று
திருச்சிராப்பள்ளியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடத்திய
உணவுத் துறையின் ஆய்வுக் கூட்டம் – 16.06.2021



ஏழையின் சிரிப்பில் இறைவனைக்
காண்போம் என்றார் அண்ணா !
ஏழையின் சிரிப்பில் அண்ணாவைக்
காண்போம் என்றார் கலைஞர் !
ஏழையின் சிரிப்பில் இன்று அண்ணாவையும்
கலைஞரையும் காண்கிறார் நம் முதல்வர் !